முதல் பக்கத் தொடர்ச்சிகள்... முதல் பக்கத் தொடர்ச்சிகள்... முதல் பக்கத் தொடர்ச்சிகள்... முதல் பக்கத் தொடர்ச்சிகள்...

சிலாங்கூர் ஆட்சிக் குழு உறுப்பினராக..

டத்தோ டாக்டர் ஹசான் முகமட் அலி, டாக்டர் ஹலிமா அலி, இஸ்கண்டார் அப்துல் சமாட்டும் பதவியேற்றனர்.

சிலாங்கூர் ஆட்சிக் குழுவில் ஐந்து மலாய்க்காரர்களும் 4 சீனர்களும் ஒரு இந்தியரும் இடம் பெற்றுள்ளனர். 10 ஆட்சிக்குழு உறுப்பினர்களில் நான்கு பேர் பெண்களாவர்.

மார்ச் 8 ஆம் தேதி நடந்த தேர்தலில் சிலாங்கூர் சட்டமன்றத்தில் 15 இடங்களை கெ அடிலானும், 13 இடங்களை ஜசெகவும் 8 இடங்களை பாஸ் கட்சியும் கைப்பற்றின.

கின்ராரா சட்டமன்ற உறுப்பினர் திரேசா கொக் முதலீடு, தொழில் துறை, வர்த்தக குழுவின் தலைவராக பொறுப்பேற்றார். இவர் செபூத்தே நாடாளுமன்ற உறுப்பினருமாவார். இந்த தேர்தலில் நாடாளுமன்ற தொகுதியில் 36 ஆயிரம் வாக்குகள் பெரும்பான்மையில் அதாவது அதிக பெரும்பான்மையில் வெற்றி பெற்றவர் இவராவார்.

சிலாங்கூர் மாநிலத்தில் துணை மந்திரிபுசார் பதவி வழங்கப் படவில்லை. கெ அடிலான் கட்சி சார்பில் டாக்டர் சேவியர் ஜெயக்குமாரும், பொறியியலாளர் முத்தையாவும் இந்த தேர்தலில் வெற்றிபெற்றனர். கோத்தா ஆலாம் ஷா சட்டமன்றத் தொகுதியில் வழக்கறிஞர் மனோகரன் மலையாளம் வெற்றி பெற்றார். அவர் தற்போது உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு சிலாங்கூர் ஆட்சிக்குழு உறுப்பினர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று இந்தியர்கள் குரல் எழுப்பினர். ஆட்சிக் குழு உறுப்பினராக ஒரே இந்தியர் மட்டுமே சிலாங்கூரில் இடம் பெற்றுள்ளார்.

புக்கிட் ஜாலில் தமிழ்ப்பள்ளி பிரச்சினைக்கு தீர்வு...

ஜாலில் மக்களுடனான சந்திப்பில் இந்த உறுதியை அவர் வழங்கினார். பூச்சோங் புக்கிட் ஜாலில் தமிழ்ப்பள்ளியில் ஓராண்டில் பல தடவை வெள்ளம் ஏற்பட்டு மாணவர்களுக்கு துன்பத்தைத் தருகிறது. மாணவர்களின் பாடப் புத்தகங்கள், பள்ளியின் தளவாடப் பொருட்கள், கணினிகள் அனைத்துமே வெள்ளத்தினால் சேதமடைந்தன.

மாநகர் மன்ற அதிகாரிகளை சந்தித்து உடனடியாக புக்கிட் ஜாலில் தமிழ்ப்பள்ளி பிரச்சினைக்குத் தீர்வு காண ஆவன செய்வேன்.

புக்கிட் ஜாலிலில் தோட்டத் தொழிலாளர் வீடமைப்புப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும். இதுகுறித்து நாடாளுமன்றத்திலும் தாம் குரல் எழுப்பப் போவதாக சிவராசா மக்களிடம் உறுதியளித்தார். ஏற்கனவே பல தடவை பூச்சோங் புக்கிட் ஜாலில் தமிழ்ப்பள்ளி, தொழிலாளர் வீடமைப்பு, வெள்ளம் போன்ற பிரச்சினைகள் பற்றி மக்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எடுத்துரைத்திருந்தபோதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தற்போது கெஅடிலான் கட்சி சார்பாக தம்மை சுபாங் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்துள்ளதால் சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தி உடனடியாக தீர்வுகளுக்கு ஆவன செய்யப்படும் என்றார் சிவராசா.

உள்நாட்டு அமைச்சருக்கு திறந்த மடல்...

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். எனவே இதிலிருந்து தெளிவாக தெரிவது என்னவென்றால் மாநில பாதுகாப்பிற்கு மனோகரன் மருட்டலாக இல்லை என்பதாகும்.

ஆகவே, இவர் உட்பட ஹிண்ட்ராப் தலைவர்களை தொடர்ந்து தடுத்து வைத்திருப்பதில் எவ்வித நியாயமும் இல்லை.

புதிய உள்துறை அமைச்சர் வெளியுறவு அமைச்சராக இருந்த போது அடிப்படை மனித உரிமையினை காக்கும் ஐ.நா.வின் நடவடிக்கைகளோடு தொடர்பு உடையவர். விசாரணையின்றி தடுத்து வைப்பது சட்டத்தின் முதல் கோட்பாட்டிற்கே முரணானது. உள்துறை அமைச்சர் தடுப்புக் காவல் சட்டத்தை மறு ஆய்வு செய்து ஐவரை விரைவாக விடுதலை செய்ய வேண்டும்.

1988ஆம் ஆண்டு நீதித் துறை நெருக்கடியின்போது நியாயமற்ற முறையில் ஆறு நீதிபதிகள் நீக்கப்பட்டது குறித்து அரசாங்கம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அமைச்சர் சைட் இப்ராஹிம் ஆலோசனை தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து கருத்துரைத்த பரம் குமாரசாமி, இந்த விவகாரத்தில் தவறு இழைத்து இன்னும் இருப்பவர்களை தங்களின் தவற்றுக்கு பொறுப்பேற்க செய்ய வேண்டும்.

மாவட்ட நகராண்மைக் கழகங்களில்...

இணைந்துள்ள 13 மாநில ரீதியிலான இந்தியர் வர்த்தக சபைகள் இந்தியர் வர்த்தக சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலான சேவையாற்ற தயார் நிலையில் உள்ளன.

மாவட்ட மற்றும் நகராண்மை நிர்வாக அமைப்புகளில் அரசியல்வாதிகள் அல்லாதோரை உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். இவர்கள் அரசியல் விருப்பு வெறுப்பின்றி பகுதிவாழ் மக்களுக்கு நிறைவான சேவையாற்ற முடியும்.

நாடளாவிய வர்த்தகத் தலைவர்கள் மற்றும் வாழ்க்கைத் தொழில் நிபுணர்கள் இதே கருத்தைத்தான் வலியுறுத்துகின்றனர்.

அரசாங்கத்தின் சமத்துவக் கொள்கைக்கு ஏற்ப இந்திய சமுதாயத்திற்கு நேர்மையான சேவை வழங்கும் வகையில் மாநில ரீதியிலான தலைமைத்துவம் மலேசிய இந்தியர் வர்த்தகர் மற்றும் தொழிலியல் சங்கத்தின் கருத்தை பரிசீலிக்கும் என நம்புகிறது.

மாநில வர்த்தக சபைப் பிரதிநிதிகளை மாவட்ட மற்றும் நகராண்மைக் கழக உறுப்பினர்களாக நியமிப்பதன் வழி சமுதாயம் மேலும் முன்னேற்றகரமான மற்றும் நடைமுறை சாத்தியமான திசையில் செல்கிறது எனும் நம்பிக்கையை மக்கள் மீண்டும் பெற உதவும் என மலேசிய இந்திய வர்த்தகத் தொழிலியல் சங்கத்தின் கௌரவ தலைமைச் செயலாளர் எஸ்.ரெங்கசாமி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

நம்பிக்கையில்லா தீர்மானம் ...

என்று டத்தோ கோவிந்தராஜு கூறினார்.

இனி மஇகாவை காப்பாற்ற கட்சியின் ஆதரவாளர்கள் துணிந்து அணி திரண்டு அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும். எங்களுக்கு சாமிவேலு தலைமைத்துவம் வேண்டாம் என்று மஇகா தலைவர்கள் போர்க் கொடி உயர்த்த வேண்டும். அப்போதுதான் தீர்வு கிடைக்கும் என்று டத்தோ கோவிந்தராஜ் வேண்டுகோள் விடுத்தார்.

4ஆவது முறையாக ஒத்திவைப்பு...

நடத்தவேண்டும் என்று காப்பார் நாடாளுமன்ற உறுப்பினருமான மாணிக்கவாசகம் கூறுகிறார்.

இருந்தாலும் இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று வழக்கறிஞர் செல்வம் சண்முகம் முறையீடு செய்துள்ளார்.

சுஜாதா மரணமடைந்து 10 மாதங்கள் ஆகிறது. வழக்கு விசாரணை தாமதமாகிறது என்று நீதிமன்றத்திற்கு வெளியே மாணிக்கவாசகம் கூறினார். இந்த வழக்கில் ஆஜராகவிருந்த வழக்கறிஞர் மனோகரன் மலையாளத்திற்கு, பதில் வேறொரு வழக்கறிஞரை நியமிக்கும் பொருட்டு தைப்பிங்கில் கழுண்டிங் சிறையில் இருந்து வரும் வழக்கறிஞர் மனோகரன் மற்றும் வழக்கறிஞர் உதயகுமார் ஆகிய இருவரையும் தாம் சந்தித்ததாக மாணிக்கவாசகம் கூறினார்.

இந்த இரண்டு தரப்பு வாதத்தை செவிமடுத்த பதிவு அதிகாரி வழக்கை எதிர் வரும் ஏப்ரல் 16ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

பதிவு அதிகாரியின் அலுவலகத்தைவிட்டு வெளியே வந்த மாணிக்கவாசகம், இந்த வழக்கு ஏன் இவ்வளவு கால தாமதம் ஏற்படுகிறது என்பது புரியாத புதிராக இருப்பதாக கூறினர். முன்னாள் செந்தூல் போலீஸ் நிலையத்தில் ஒசிபிடியாக பணியாற்றிய துணை போலீஸ் கமிஷனர் குமரன், தற்போது வேலை மாற்றலாகி புக்கிட் அமான் போலீஸ் தலைமையகத்தில் போக்குவரத்து போலீஸ் உயர் அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அரசியல் அமைப்பாக அங்கீகரிப்பீர்...

அமல்படுத்த வேண்டும். ஐந்து ஹிண்ட்ராப் தலைவர்கள் தேசிய பாதுகாப்பிற்கு ஒரு போதும் மிரட்டலாக இல்லை.

பயங்கரவாத அமைப்புகளோடு தொடர்பு என்பது சுத்த அபத்தமான குற்றச்சாட்டு.

ஹிண்ட்ராப் பேரணியால் இந்திய வாக்காளர்களின் ஆதரவினை இழந்துவிடுவோம் என்ற அச்சத்தின் காரணமாக அரசாங்கம் ஹிண்ட்ராப் தலைவர்களை இசா கூட்டத்தின் கீழ் கைதுசெய்ய முடிவு எடுத்தது என்பதை இந்த கருத்தரங்கம் நன்கறியும்.

ஐவரும் உடனடியாக நிபந்தனையின்றி விடுவிக்கப்படவேண்டும். சட்டவிரோதமான முறையில் கைது செய்தற்காக அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

தேர்தல் களத்தில் ஹிண்ட்ராப்பின் பங்களிப்பிற்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் ஜசெக - கெடிலான் - பாஸ் கட்சிகள் தங்களின் பணியினை ஆற்றவேண்டும்.

நாடாளுமன்ற மேலவையில் குறைந்தபட்சம் ஐந்து ஹிண்ட்ராப் தலைவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்படவேண்டும்.

பினாங்கு, பேரா, சிலாங்கூர் போன்ற மாநிலங்களில் துணை மந்திரிபுசார் வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும். ஹிண்ட்ராப் ஒரு அரசியல் அமைப்பாக பதிவு செய்யப்படுவதற்கு அரசு உடனடியாக ஒப்புதல் வழங்கபடவேண்டும். ஹிண்ட்ராப் ஒரு அரசியல் அமைப்பாக பதிவு செய்யப்படுவதற்கு அரசாங்கம் உடனடியாக ஒப்புதல் வழங்கவேண்டும். இசா சட்டத்தை எதிர்வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் அகற்றுவதற்கு பிரதமர் ஆவன செய்யவேண்டும்.

ஹிண்ட்ராப் மலேசிய இந்தியர்களின் புதிய உரிமைக்குரல் என்ற உண்மை நிலையினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் வேதமூர்த்தி தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார். இசா சட்டம் அகற்றப்பட வேண்டும் என்ற ஹிண்ட்ராப்பின் தீவிர பிரச்சாரம் தொடரும்.

28 இந்திய அமைப்புக்களுக்கு...

வெளியிட வேண்டியதுதானே? தாங்கள் முறையான கணக்கு வைத்திருப்பதாக சொல்லும் ராசசெல்வன் ஏன் அதன் விவரங்களையும் வங்கி கணக்கறிக்கையையும் வெளியிட தயக்கம் காட்டி வருகிறார்? பொய்யான கணக்கறிக்கையோ என கேள்வி எழுப்பினர் இந்துணன்.

தவறான தகவல்களைக் கொடுத்து இயக்கத்தை மாசுபடுத்துவோர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய செயலவை முடிவெடுத்திருப்பதாக கூறியிருப்பது வேடிக்கையாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

ராசசெல்வன் மற்றும் வேந்தன் மீதும், அவர்களுக்கு உடந்தையாக இருந்துவரும் அனைத்து இந்து இளைஞர் பேரவை மத்திய செயலவை உறுப்பினர்கள் மீதும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்றும் இவ்விவகாரத்தை பொதுப்பேரவையில் விவாதிக்க அவசர ஆண்டுப் பொதுக்கூட்டம் விரைவில் கூட்டப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை ராசா ஜெயா இந்து இளைஞர் இயக்கம் முன்மொழிவதாக இந்துணன் கூறினார்.

மேலும் இவ்விவகாரம் குறித்து ராசாஜெயா இந்து இளைஞர் இயக்கம் போலீஸ் புகார் செய்யவிருப்பதாகவும், அதனை தொடர்ந்து சங்க பதிவு இலாகா மற்றும் ஏசிஏ கவனத்திற்கும் தாம் கொண்டு செல்லவிருப்பதாகவும் இந்துணன் கூறினார்.

முத்தரப்பு பேச்சு தோல்வி...

விக்னேஸ்வரன் தலைமையில் இரண்டு தரப்பினருக்குமிடையில் இப்பேச்சு வார்த்தை நடைபெற்றது. மாநில இளைஞர் பிரிவுத் தலைவர் ஆர்.இராஜேந்திரன் அழைக்கப்படாமலேயே அவர் மீது மேற்கொள்ளப்படவிருந்த ஒரு சார் பற்ற முடிவுகளை முறியடிக்கும் பொருட்டு நேற்று முன்தினம் கூட்டப்பட்ட இக்கூட்டத்திற்கு திடீரென அவர் வருகையளித்ததும் அங்கு குழுமியிருந்த மஇகா இளைஞர் உறுப்பினர்களிடையே பெரும் அதிர்ச்சியும் பரபரப்பும் ஏற்பட்டது.

நெகிரி மாநில மஇகா தலைமையகத்திற்கு இரவு சுமார் 8.15 மணியளவில் வந்த தேசிய இளைஞர் பிரிவுத் தலைவர் எஸ்.விக்னேஸ்வரனிடம் பத்திரிகையாளர்கள் சூழ்ந்து கொண்டு நிருபர்கள் சந்திப்பு உள்ளதா என்று வினவிய போது இல்லை, இல்லை என்று தெரிவித்தார்.

"போதும், போதும்", எதிர்க்கட்சிகள் இந்த தேர்தலில் தே.மு ஆட்சியை ஆட்டிப் படைத்து விட்டனர். இதனை எதிர்கொள்ள நாம் ஆயத்தமாக இப்போதே தேவையான நிரந்தர முன்னேற்பாடுகளை செய்ய வேண்டிய சூழ்நிலைகள் உள்ளன. இது மஇகாவின் உள்விவகார பிரச்சினை. இதைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று எஸ்.விக்னேஸ்வரன் நிருபர்களிடம் கேட்டுக் கொண்டார்.

இந்த முத்தரப்பு பேச்சுவார்த்தையில் டத்தோ டி.ராஜகோபாலு, ஆர்.இராஜேந்திரன், தம்பின் தொகுதி தலைவர் எஸ்.இராஜேந்திரன் மற்றும் தெலுக்கெமாங், தம்பின், ரெம்பாவ் ஆகிய 3 தொகுதிகளின் இளைஞர் பிரிவுத் தலைவர்கள் மட்டும் கலந்து கொண்டதுடன் வே.மோகன், துணைத் தலைவர் டத்தோ டாக்டர் எல்.கிருஷ்ணன், பொருளாளர் செல்லகிருஷ்ணன் ஆகியோர் இக்கூட்டத்தை புறக்கணித்ததாக நம்பப்படுகிறது.

நெகிரி மாநில மஇகா தொடர்பு குழுத் தலைவர் டடி.ராஜகோபாலு பதவி நீக்கம் செய்தால் எல்லா விவகாரமும் ஒரு முடிவுக்கு வந்துவிடும் என பரவலாக இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள இந்த ஆதங்கம் இராஜேந்திரன் மூலம் வெடித்திருப்பதற்கு கிளைத் தலைவர்கள் கூட ஆதரவு கொடுத்து வருவதாகவும் கூறப் படுகிறது.

பேரா அரசு ஆட்சிக்குழு உறுப்பினர் நியமனம்

அரண்மனையின் ஒப்புதலுக்கு காத்திருக்கிறார்கள்!

(ப.சந்திரசேகர்)

ஈப்போ, மார்ச் 25- பேரா அரசு ஆட்சிக் குழுவில் இடம் பெறும் 10 பேர் கொண்ட பெயர்ப்பட்டியல் பேரா அரச பேராளர் ராஜா நஸ்ரின் ஷாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில் அரண்மனையின் ஒப்புதலுக்கு மந்திரி புசார் காத்திருக்கிறார் என்று ஐசெக வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது.

மார்ச் 8ஆம் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு பேரா அரசின் ஆட்சி அதிகாரம் எதிர்க்கட்சிகள் கூட்டணி சார்பில் அமைக்கப்பட்டது.

கடந்த வாரம் பேரா மாநிலத்தின் மந்திரி புசாராக பாஸ் கட்சியின் மாநிலச் செயலாளர் முகமட் நிஸார் ஜமாலுடின் பொறுப்பேற்ற பிறகு மாநில துணை மந்திரி புசார்கள் இருவர் மற்றும் 10 ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பெயர்ப் பட்டியல் தயார் செய்யப்பட்டது.

ஜசெகவிற்கு 6 இடங்களும் பாஸ் கட்சிக்கு 1 இடமும் கெஅடிலான் கட்சிக்கு 3 இடமும் ஆட்சிக்குழுவில் வழங்க இணக்கம் காணப் பட்டது. 10 பேர் கொண்ட பெயர்ப் பட்டியலை மந்திரி புசார் முகமட் நிஸார் ராஜா நஸ்ரினிடம் ஒப்படைத்து விட்டதாகத் தெரிகிறது.

பதவிப் பிரமாணம் செய்யப்படும் நாள் என்றைக்கு என்பதை அரண்மனைதான் தீர்மானிக்க வேண்டும் என்ற நிலை உள்ளதால் அதற்காக மந்திரி புசார் காத்திருக்க வேண்டியுள்ளது. மாநில ஆட்சிக்குழுவில் இடம் பெறுபவர்கள் யார்? யார்? என்பதில் ஆருடங்கள் வலுப்பெறுவதால் அனைவரது பெயர்களையும் வெளிப்படுத்துவது சிறப்பு என்று பெரும்பாலானவர்கள் கருத்து தெரிவித்தனர்.

டிங்கில் தாமான் பெர்மாத்தா பள்ளிக்குச் செல்லும் சாலை வெள்ளத்தில் மூழ்கியது

(பெ.ஆறுமுகம்)

டிங்கில்,மார்ச் 25- தொடர்ந்து பெய்துவரும் மழையால் டிங்கில் தாமான் பெர்மாத்தா தமிழ்ப்பள்ளிக்குச் செல்லும் சாலை நீரில் மூழ்கியது. இதனால் இப்பள்ளியில் பயிலும் எல்லா மாணவர்களும் நேற்று பள்ளிக்குச் செல்ல முடியாமல் வீடு திரும்பினர்.

கடந்த ஒரு வாரமாக பெய்துவரும் அடை மழையினால் ஆற்று நீரின் அளவு அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து மிகவும் மோசமான அளவிற்கு பள்ளி செல்லும் சாலை நீரில் மூழ்கியதாக பள்ளியின் தலைமையாசிரியர் திருமதி பாவாயி தெரிவித்தார்.

2002ஆம் ஆண்டு இங்கு இப்பள்ளி துவங்கப்பட்ட நாள் தொட்டு இன்றுவரை இப்பிரச்சினை நிலவி வருவதாக தெரிவித்த அவர் அடிக்கடி ஏற்படும் வெள்ளப் பிரச்சினையால் மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டு வருவதாக அவர் நண்பனிடம் தெரிவித்தார். இவ்வாண்டு யூபிஎஸ்ஆர் தேர்வு எழுதவிருக்கும் மாணவர்கள் அதிகமாக பாதிப்படைந்து வருவதாக தெரிவித்த திருமதி பாவாயி, மாணவர்களுக்கு பேராபத்தை ஏற்படுத்தும் நிலையில் உள்ள இப்பகுதியை சம்பந்தப்பட்ட இலாகாவினர் விரைந்து சீர்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

132 மாணவர்கள் பயிலும் இப்பள்ளிக்கான பிரதான சாலை முழுமையாக சீரமைப்பு செய்யப்படும்வரை இங்குள்ள ஆலயத்திற்கு அருகில் உள்ள சாலையை தற்காலிகமாக பயன்படுத்துவதற்கு உரிய ஏற்பாட்டை சம்பந்தப்பட்ட தரப்பினர் செய்து கொடுக்குமாறு திருமதி பாவாயி கேட்டுக் கொண்டார். நேற்று காலை பள்ளிக்குச் செல்ல முடியாத அளவிற்கு சாலையின் ஒரு பகுதி நீரினால் மூழ்கியது. இதைத் தொடர்ந்து தாம் சிப்பாங் மாவட்ட கல்வி இலாகா அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தகவலை தெரிவித்ததை அடுத்து எல்லா மாணவர்களையும் வீட்டிற்கு செல்ல உத்தரவிட்டதாக அவர் கூறினார்.

சிப்பாங் மாவட்ட வடிகால் நீர்பாசன இலாகா மற்றும் சிப்பாங் மாவட்ட கல்வி இலாகாவிற்கு தெரிவித்ததைத் தொடர்ந்து அங்கு வந்து சேர்ந்த வடிகால் நீர்ப்பாசன அதிகாரிகள், இங்கு அடிக்கடி ஏற்படும் வெள்ளப் பிரச்சினைக்கு உண்மையான காரணம் என்ன என்பது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என தெரிவித்துச் சென்றனர்.

மாணவர்களின் உயிருக்கு பேராபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலையில் உள்ள இப்பகுதி கடந்த பல ஆண்டுகளாக இதே நிலையிலேயே இருந்து வருவதாக பல பெற்றோர்கள் நண்பனிடம் புகார் தெரிவித்தனர். நடக்கக் கூடாத சம்பவங்கள் ஏதேனும் நிகழும் முன்னர் இப்பகுதியை உடனடியாக சீர்படுத்த வேண்டும். அதற்கு இத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

எதிர்க்கட்சிக்கு ஐபிஎப் ஆதரவா?

–அப்பளசாமி

பாகான் டத்தோ, மார்ச் 25- பிரதமர் மற்றும் துணைப்பிரதமர் தலைமையிலான தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு ஐபிஎப் தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் என்று ஐபிஎப் கட்சியின் உச்சமன்ற உறுப்பினரும் பாகான் டத்தோ தொகுதி ஐபிஎப் தலைவருமான அப்பளசாமி கூறினார்.

பாகான் டத்தோ தொகுதி ஐபிஎப் செயலாளர் விஜயனும் தலைவர் அப்பளசாமியும்

நாட்டின் பொதுத் தேர்தலில் தேசிய முன்னணி வேட்பாளரின் வெற்றிக்கு நாடு தழுவிய நிலையில் ஐபிஎப் தலைவர்களும் தொண்டர்களும் கடுமையாகப் பாடுபட்டுள்ளனர். டான்ஸ்ரீ பண்டிதன் தலைமையிலான ஐபிஎப் கட்சி எந்த நிலையிலும் தேசிய முன்னணிக்கு எதிராக செயல்பட்டது கிடையாது. இனியும் செயல்படாது. எங்கள் கட்சி தலைவரின் ஆணையை நாங்கள் ஒருபோதும் மீறியது கிடையாது என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் நாட்டின் பிரதான தேசிய மொழி பத்திரிகை ஒன்று, நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஐபிஎப் எதிர்க்கட்சியை ஆதரித்ததாக கட்சியின் உச்சமன்ற உறுப்பினர் அப்பளசாமி கூறினார் என்று செய்தி வெளியிட்டிருந்தது, இது உண்மைக்கு புறம்பான செய்தியாகும். நான் எத்தகைய சூழ்நிலையிலும் இதுபோன்று செய்தியை விடுத்தது கிடையாது.

என்னைப் பேட்டி கண்ட சம்பந்தப்பட்ட நிருபரிடம் இந்நாட்டு இந்திய சமுதாயம் பல்வேறு சமூக பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறது.

குறிப்பாக கல்வி மற்றும் பொருளாதாரத் துறையில் பின் தங்கிய நிலை, விலைவாசி உயர்வு தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வின்மை, நாட்டில் உள்ள தமிழ்ப்பள்ளிகளின் மிக மோசமான நிலை தொடர்ந்து பந்துவான் மோடல்பள்ளிகளாக செயல்படுவது அடிப்படை வசதியின்மை, ஆலய உடைப்பு, பொதுச் சேவைத்துறை இராணுவம், கடற்படை, ஆகாயப் படை மற்றும் போலீஸ் துறையில் தொடர்ந்து இந்தியர்கள் புறக்கணிப்பு, வேலையில்லாப் பிரச்சினை தேசிய மற்றும் இடைநிலைப்பள்ளிகளில் இந்திய மாணவர்களுக்கு எதிரான புறக்கணிப்பு இந்திய பள்ளி மாணவர்களுக்கிடையே கட்டொழுங்கு பிரச்சினை மற்றும் இந்திய இளைஞர்களிடையே காணப்படும் சமூக சீர்கேடுகளை தேசிய முன்னணி அரசாங்கம் களைய அக்கறை காட்டாத காரணத்தினால் தான் இந்நாட்டு இந்திய சமுதாயத்தின் வாக்குகள் எதிர்க்கட்சிகளின் பக்கம் சாய நேரிட்டதாகவும் தான் கூறினேன்.

இந்திய சமுதாயம் எதிர்நோக்கும் மேற்கண்ட பிரச்சினைகளுக்கு தேசிய முன்னணி அரசாங்கம் உடனடி தீர்வு காண வேண்டும். அப்பொழுதுதான் இந்நாட்டு இந்திய சமுதாயம் தேசிய முன்னணி அரசாங்கத்தின் மீது முழு நம்பிக்கை வைக்கும். இல்லையென்றால் அடுத்தடுத்த பொதுத் தேர்தல்களிலும் இந்திய சமுதாயத்தின் இந்நிலை தொடரக்கூடும் என்றும் கூறினேன். என்னுடைய பேட்டியை திசை திருப்பி மேற்கண்ட தேசிய மொழிப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. மேற்கண்ட பத்திரிகைக்கு எதிராக இங்குள்ள போலீஸ் நிலையத்திலும் புகார் செய்திருப்பதாகவும் அப்பளசாமி நண்பனிடம் தெரிவித்தார்.

திரு. மோகனகுமார் த/பெ கோபால் கருமக்கிரியை

தோற்றம் : 9.1.1988
மறைவு : 12.3.2008

கடந்த 12.3.2008 புதன்கிழமை எங்கள் அன்பு மகன் திரு. மோகனகுமார் த/பெ கோபால் அவர்கள் சிவபதம் அடைந்ததை முன்னிட்டு நாளை 26.3.2008 புதன்கிழமை இரவு 8.00 மணிக்கு எண். 638, லோரோங் ஸ்ரீ மாவார் 2/2, தாமான் ஸ்ரீ மாவார், 70450 சிரம்பான், நெ.செ. எனும் முகவரியிலுள்ள எங்கள் இல்லத்தில் கல்நிறுத்தி, மறுநாள் 27.3.2008 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு எங்கள் இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும், 1.00 மணிக்கு நடைபெறும் பந்தி போஜனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இக்கண், பிரிவால் துயருறும்
பெற்றோர்: திரு.கோபால்
திருமதி லலிதா,
உடன்பிறப்புகள், உற்றார்-உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.
016-9014027, 019-3169358

நன்றி: இறுதிச் சடங்கின் போது மலர்வளையம் சாற்றி அனுதாபம் தெரிவித்து, உதவி செய்தவர்களுக்கு நன்றி.
குறிப்பு: இதனையே அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

திரு. P. வீரசிங்கம் த/பெ புள்ளிமான் மோட்ச தீபம்

தோற்றம் : 25.9.1951
மறைவு : 27.2.2008

கடந்த 27.2.2008 புதன்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு என் அன்புக் கணவர் **திரு. P. வீரசிங்கம்** அவர்கள் இறைவன் திருவடி அடைந்ததை முன்னிட்டு நாளை 26.3.2008 புதன்கிழமை இரவு 8.00 மணிக்கு **எண் 507 K, பத்து 21/2, ஜாலான் சிம்பாங், தைப்பிங்** எனும் முகவரியிலுள்ள எங்கள் இல்லத்தில் கல்நிறுத்தி படையலிட்டு மோட்ச தீபம் ஏற்றி மறுநாள் 27.3.2008 வியாழக்கிழமை அதி காலை 5.30 மணிக்கு தைப்பிங் **தண்ணீர் மலைக் கோயில் ஆற்றங் கரையில்** நடைபெறும் கிரியையிலும் நண்பகல் எங்கள் இல்லத்தில் நடைபெறும் மதிய உணவிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்

இக்கண், கணவரை இழந்து துயருறும்
மனைவி: திருமதி T.வாசுகி
மகன், மகள்கள், மருமகன்கள், மருமகள், தாயார், சகோதரர்கள், சகோதரிகள் உற்றார்- உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.
தொடர்புக்கு: 016-5991985

நன்றி: நல்லடக்கத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையம் சாற்றியவர்களுக்கும் மற்றும் பல வகையில் உதவிய அன்பர்களுக்கும் எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி S. சகுந்தலா (ஆசிரியை) மோட்ச தீபம்

தோற்றம் : 8.5.1941 மறைவு: 11.3.2008

கடந்த 11.3.2008 எங்கள் அன்புத் தாயார்

திருமதி S.சகுந்தலா

அவர்கள் இறைவனடி சேர்ந்ததை முன்னிட்டு இன்று 25.3.2008 செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு **எண் 5, தாமான் விஜயா, லாபீஸ், ஜோகூர்** எனும் முகவரியிலுள்ள எங்கள் இல்லத்தில் மோட்ச தீபம் ஏற்றி, நாளை 26.3.2008 புதன்கிழமை அதிகாலையில் **பெக்கோ ஆற்றங்கரையில்** நடைபெறும் கிரியையிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு பிற்பகல் 1.00 மணிக்கு எங்கள் இல்லத்தில் நடைபெறும் பந்திபோஜனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இக்கண், பிரிவால் துயருறும்
மகன் - மகள்கள் - மருமகன்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் - உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.

நன்றி: இறுதிச் சடங்கை ஏற்று நடத்திய குழுவினர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையம் சாற்றியவர்களுக்கும் மற்றும் பல வகையில் உதவிக்கரம் நீட்டிய நல்லுள்ளங்கள் அனைவருக்கும் எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி சு. துளசி கருமக்கிரியை

கடந்த 12.3.2008 புதன்கிழமை பிற்பகல் 2.20 மணிக்கு என் அன்பு மனைவி

திருமதி சு. துளசி

அவர்கள